உ

மாணவர்

# இலக்கண வினாவிடை

7ம் ஆண்டிலிருந்து க. பொ. த. ப. (சா / த) வரை ஏற்றது

ஆக்கம்:-

சி. பொன்னம்பலம் ஆசிரியர்

வெளியீடு:
கூத்தப்பிரான் பதிப்பகம்
காரைநகர்.

24

பதிப்புரிமை)

(விலை ரூபா: 3 - 00

# மாணவர் இலக்கண வினு விடை

1. மொழி என்பது யாது?
உள்ளக் கருத்தை அறிவிக்கும் கருவி மொழியாகும்

2. எழுத்தென்பது யாது?
சொல்லுக்கு முதற் காரணமாகிய ஒலி வடிவம் எழுத்து

3. இது பற்றிக் கூறும் நன்னூல் வரிகளைக் குறிப்பிடுக.
''மொழி முதற் காரணமாம் அணுத் திரளொலி எழுத்து''

4. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
நான்கு வகைப்படும்

5. அவை யாவை?
உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆயுத எழுத்து

6. உயிர் எழுத்துக்கள் யாவை?
அ . . . . ஔ ஈ ரு க உள்ள பன்னிரெண்டும் உயிர் எழுத்துக்களாகும்

7. மெய் எழுத்துக்கள் யாவை?
க் . . . . ன் வரையுள்ள பதினெட்டும் மெய் எழுத்துக்களாகும்

8. உயிர் மெய் எழுத்துக்கள் யாவை?
பன்னிரெண்டு உயிரும் பதினெட்டு மெய்யும் சேர்ந்து வரும் இருநூற்றுப் பதினறு எழுத்துக்களாகும்

9. உயிர்மெய் எழுத்துகட்கு சில உதாரணம் தருக.
க் + அ = க      க் + ஆ = கா
ம் + அ = ம      ன் + ஓ = னோ

10. இயல்பு கருதி எழுத்துக்களை எவ்வாறு இரு வகைப் படுத்துவர்?
முதல் எழுத்து, சார்பெழுத்து என இரு வகைப் படுத்துவர்

11. முதலெழுத்தாவது யாவை?
உயிர் பன்னிரெண்டு, மெய் பதினெட்டுமாக முப்பது எழுத்தாம்

12. முதலெழுத்தாவது யாது?
ஒன்றையும் சாராது தானக இயங்கும் முதன்மை எழுத்துக்கள் முதலெழுத்தாகும்

13. சார்பெழுத்துக்கள் யாவை?
உயிர் மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம் மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பனவாம்

14. சார்பெழுத்தாவது யாது?
தானாக இயங்காது வேறொன்றைச் சார்ந்து வருவது சார்பெழுத்தாகும்

15. ஆய்த எழுத்தாவது யாது?
சொற்களின் நடுவில் வரும் மூன்று புள்ளி வடிவுடையதான எழுத்து

16. உயிர் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
குற்றெழுத்து நெட்டெழுத்து என இருவகைப் படும்

17. குற்றெழுத்துக்கள் யாவை?
அ. இ. உ. எ. ஒ என்னும் ஐந்து குற்றெழுத்து ஆகும்

18. நெட்டெழுத்துக்கள் யாவை?
ஆ. ஈ. ஊ. ஏ. ஐ. ஓ. ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்துக்களாகும்

19. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்

20. வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் யாவை?
வல்லெழுத்துக்கள்: க் ச் ட் த் ப் ற்
மெல்லெழுத்துக்கள்: ங் ஞ் ண் ந் ம் ன்
இடையெழுத்துக்கள்: ய் ர் ல் வ் ழ் ள்

21. சுட்டெழுத்துகள் யாவை?
அ, இ, உ என்னும் மூன்றும் மொழிக்கு முதலில் சுட்டுப் பொருளில் வரும்போது சுட்டெழுத்தாகும்

22. வினாவெழுத்துக்கள் யாவை?
எ. மொழிக்கு முதலிலும், ஆ ஓ மொழிக்கு இறுதியிலும், ஏ மொழிக்கு முதலிலும் கடைசியிலும் வினாப்பொருளில் வரும் போது வினாவெழுத்துக்களாம். யா என்னும் உயிர்மெய்மொழிக்கு முதலில் வினாப்பொருளில் வரும்போது வினாவெழுத்தாம்.

23. எழுத்துககள் ஒலிக்கும் கால அளவை எவ்வாறு கூறுவர்?
மாத்திரை என்பர்

24. மாத்திரை என்றால் என்ன?
கைநொடிப்பொழுது அல்லது கண்ணிமைப் பொழுது

25. ஒரு மாத்திரை எழுத்துக்களைக் கூறுக
குற்றெழுத்துக்கள், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ஒற்றளபெடை (தனித்தனி மாத்திரை ஒன்று)

26. நெட்டெழுத்திற்கு மாத்திரை எத்தனை?
இரண்டு

27. உயிரளபெடையாவது யாது?
தனது மாத்திரையில் நீண்டு ஒலிக்கும் உயிர்நெட்டெழுத்து ஏழுமாம்.

28. ஒற்றளபெடையாவது யாது?
தனது மாத்திரையில் நீண்டு ஒலிக்கின்ற மெய்யெழுத்தும் ஆய்த எழுத்துமாகும்.

29. குற்றியலிகரமாவது யாது?
தனது மாத்திரையில் குறைந்து ஒலிக்கின்ற இகரம் (இ) குற்றியலிகரமாகும்.

30. குற்றியலுகரமாவது யாது?
தனது மாத்திரையில் குறைந்து ஒலிக்கின்ற உகரம் குற்றியலுகரமாகும். இது தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துகட்கு பின்னே வல்லின மெய்களின் மேல் ஏறி வரும்.

31. சொல் என்பது என்ன?
ஓரெழுத்து அல்லது இரண்டு முதலிய பல எழுத்துக்களால் ஆக்கப்பட்டு பொருளைத் தருவது சொல்லாகும்.

32. சொல்லை எவ்வாறு அழைக்கலாம்?
பதம் என அழைக்கலாம்.

33. சொற்கள் எத்தனை வகைப்படும்?
பகுபதம், பகாப்பதம் என இருவகைப்படும்

34. பகாப்பதம் என்றால் என்ன?
பிரிக்க முடியாத இயல்பை உடைய பதம் (சொல்) பகாப்பதம்.

35. பகாப்பதம் எத்தனை வகைப்படும்?
பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்

PRINCIPAL
Karanavai Ponnampala Vidyalaya
KARAVEDDY

36. பகாப்பதத்திற்கு உதாரணம் தருக.
பெயர்ப்பகாப்பதம் — பொன், மரம்
வினைப்பாகாப்பதம் — நட, உண்
இடைப்பகாப்பதம் — கொல், ஓ
உரிப்பகாப்பதம் — நனி, தவ

37. பகுபதமாவது யாது?
பகுக்கப்படும் இயல்பை உடைய சொல் (பதம்) பகுபதம் எனப்படும்

38. பகுபதம் எத்தனை வகைப்படும்?
பெயர்ப் பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்

39. வினைப்பகுபதங்கள் யாவை?
தெருநிலைவினைப் பகுபதம், குறிப்புவினைப் பகுபதம் என இரு வகைப்படும்

40. பகுபத உறுப்புக்கள் யாவை?
பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை சந்தி, விகாரம் என்னும் ஆறுமாம்

41. பகுதி யாவது யாது?
பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதமாம்

42. விகுதி யாவது யாது?
பகுபதங்களின் இறுதியில் நிற்கும் (இடைப்) பகாப்பதங்களாம்

43. இடைநிலைகள் என்றால் என்ன?
பகுபதங்களிலே பகுதிக்கும் விகுதிக்கும் நடுவிலே நிற்கும் இடைப் பகாப்பதங்களாம்

44. சாரியை என்றால் என்ன?
இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது சாரியை

45. சந்தி என்றால் என்ன?
புணரியலிற் சொல்லப்படும் தோன்றல் முதலிய புணர்ச்சிவிகாரங்கள் (பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் தோன்றும்)

46. விகாரமாவது யாது?
விகாரமாவது மெல்லின மெய்யை வல்லின மெய்யாக்கலும் வல்லின மெய்யை மெல்லின மெய்யாக்கலும் குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும் நெட்டெழுத்தை குற்றெழுத்தாக்கலும் இல்லாத எழுத்தை விரித்தலும் உள்ளஎழுத்தைத் தொகுத்தலுமாம்.

47. சொற்களின் வகைகள் யாவை?
பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

48. பெயர்ச்சொல் என்றால் என்ன?
ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

49. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரணவிடுகுறிப்பெயர், என 3 வகைப்படும்.

50. இடுகுறிப்பெயராவது யாது?
காரணம் இன்றி ஒரு பொருளுக்கு வழங்கி வரும் பெயர்.

51. காரணப் பெயராவது யாது?
ஏதாவது காரணத்தால் அப்பொருளை உணர்த்தி வரும் பெயர்.

52. காரண இடுகுறிப் பெயராவது யாது?
காரணங் கருதிய போது காரணத்தை உடைய பல பொருட்களுக்கும் காரணங்கருதாத போது இடுகுறியளவாய் ஒவ்வொரு பொருட்களுக்கும் விளங்கும்.

53. இப்பெயர்கள் மேலும் எவ்வாறு பிரிக்கப்படும்?
பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என மேலும் இருவகைப்படும்.

54. பொதுப்பெயர் என்றால் என்ன?
பல பொருட்களுக்கு பொதுவாக வழங்கிவரும் சொல்.

55. சிறப்புப்பெயர் என்றால் என்ன?
ஒரு பொருளுக்கே சிறப்பாக வழங்கிவருவது.

56. அறுவகைப் பெயர்களும் யாவை?
பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பனவாம்.

57. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலுக்கே பெயராய் வரும் | தொழிலை உடைய பொருளுக்கே பெயராய் வரும். |
| பெரும்பாலும் காலங் காட்டாது படர்க்கை இடத்திற்கே உரியது. | முக்காலமும் காட்டும் மூவிடத்திற்கும் உரியது. |

58. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?

வினை பெயர் தன்மைப்பட்டு வேற்றுமை உருபுஏற்று வரும்.

59. தன்மைப் பெயர் என்றால் என்ன?
தன்மை (தனது) இடத்தைக் குறிப்பது.

60. முன்னிலைப்பெயர் என்றால் என்ன?
முன் (முன்னிலை) இடத்தைக் குறிப்பது.

61. படர்க்கைப் பெயர் என்றால் என்ன?
படர்க்கை (தூரத்தே உள்ளவற்றை) இடத்தைக் குறிப்பது.
(தன்மை முன்னிலை அல்லாத ஏனைய யாவும் படர்க்கை இடம்)

62. இருதிணைக்கும் மூவிடத்துக்கும் பொதுவாய் வரும் பெயர் யாது?
''எல்லாம்''

63. திணை என்றால் என்ன?
திணை என்பது பொருட்களின் (சாதி), பிரிவைக் குறிப்பது.

64. அவை யாவை?
உயர்திணை, அஃறிணை. (மக்கள் தேவர் நரகர் - உயர்திணை ஏனைய யாவும் அஃறிணை)

65. திணையின் உட்பிரிவு யாது?
பால்

66. உயர்திணையிலுள்ள பால்கள் எவை?
ஆண்பால், பெண்பால், பலர்பால்.

67. அஃறிணையிலுள்ள பால்கள் எவை?
ஒன்றன்பால், பலவின்பால்.

68. ஆகுபெயரென்றால் என்ன?
ஒரு பெயர் இன்னொரு பெயருக்கு ஆகி வருவது ஆகுபெயர் (ஒரு பொருளின் பெயர் அதனோடு சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு தொன்று தொட்டு வழங்கி வருவது)

69. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
பதினாறு வகைப்படும்.

70. அவை யாவை?
பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகு பெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர், எண்ணலளவை யாகுபெயர், எடுத்தலளவை ஆகுபெயர், முகத்தலளவை யாகு

பெயர், நீட்டலளவை யாகுபெயர், சொல்லாகுபெயர். தானி யாகுபெயர், கருவியாகுபெயர், கருத்தாவாகுபெயர், உவமை யாகுபெயர். காரியவாகுபெயர்

உதாரணம்:- சென்னை சிரித்தது - இடவாகுபெயர். சென்னை என் னும் இடப்பெயர். அங்குள்ள மக்களுக்காகி வந்தது)

71. வேற்றுமை என்றால் என்ன?

உருபுகள் மூலம் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை.

72. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

முதலாம் வேற்றுமை முதல் எட்டாம் வேற்றுமை ஈறாக எட்டு வகைப்படும்.

73. வேற்றுமை உருபுகள் யாவை?

| | | | |
|---|---|---|---|
| 1 - ம் | வேற்றுமை | உருபுஇல்லை. | |
| 2 - ம் | வேற்றுமை | உருபு | ''ஐ'' |
| 3 - ம் | வேற்றுமை | உருபுகள் | ஆல், ஒடு, ஓடு |
| 4 - ம் | ,, | ,, | கு |
| 5 - ம் | ,, | ,, | இல் இன் (இருந்து, நின்று) |
| 6 - ம் | ,, | ,, | அது. ஆது. அ (உடைய) |
| 7 - ம் | ,, | ,, | கண். இல், உள் இடம் |
| 8 - ம் | ,, | ,, | விளிக்கப்படு பொருளாக வேறு படுத்தும். |

(இதற்குத் தனி உருபு இல்லை.) விளியேற்கும் சொல்லின் ஈற் றெழுத்து ஏ, சே மிகுதலும், அது திரிதலும், கெடுதலும், இயல் பாதலும், ஈற்றயல் எழுத்துத்திரிதலுமாம்.

74. வினைச்சொல் என்றால் என்ன?

ஒன்றினது தொழிலை உணர்த்துஞ்சொல் வினைச்சொல்லாகும்.

75. வினைச்சொல் எத்தனை வகைப்படும்?

வினைமுற்று, பெயரெச்சம், வினைஎச்சம், என மூன்று வகைப் படும்.

76. வினைமுற்று என்றால் என்ன?

பால் காட்டும் விகுதிகளைப் பெற்று பொருள் முற்றுப் பெற்று நிற்கும் வினைச்சொல் வினைமுற்று எனப்படும்.

77. பெயரெச்ச மென்றால் என்ன?

பால் காட்டும் விகுதிகளைப் பெறாது குறைச்சொல்லாய் பெய ரைக் கொண்டு முடியும் வினை பெயரெச்சமாகும்.

78. வினையெச்ச மென்றால் என்ன?

பால் காட்டும் விகுதிகளைப் பெறாது குறைச் சொல்லாய் வினை யைக் கொண்டு முடியும் வினை வினையெச்சமாகும்.

79. காலங்கள் யாவை?
இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகும்.

80. இறந்தகாலம் என்றால் என்ன?
செயல் (தொழில்) நடந்து முடிந்ததைக் குறிப்பது.

81. நிகழ்காலம் என்றால் என்ன?
செயல் (முற்றுப்பெறாது) நடக்கின்றதைக் குறிப்பது.

82. எதிர்காலம் என்றால் என்ன?
இனிமேல் நடக்கப் போகும் செயலைக் குறிப்பது.

83. தெருநிலை வினை என்றால் என்ன?
தொழிலும் காலமும் வெளிப்படையாக தெரியநிற்பது தெருநிலை வினையாகும். இது செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் என்ற ஆறையும் உணர்த்தும்.

84. குறிப்பு வினை என்றால் என்ன?
செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாமல் சொல் வோனது குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினையாகும்.

85. உடன்பாட்டு வினையாவது யாது?
தொழிலினது நிகழ்ச்சியை உணர்த்தும் வினை உடன்பாட்டு வினை யாகும்.

86. எதிர்மறை வினையாவது யாது?
தொழில் நிகழாமையை உணர்த்தும் வினை எதிர்மறை வினை யாகும்.

87. ஏவல் வினைமுற்று என்பது யாது?
கட்டளைப் பொருளில் வரும் வினைமுற்று ஏவல் வினைமுற்று ஆகும்.

88. வியங்கோள் வினைமுற்றுக்களாவது யாது?
க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகள் இறுதியிலுடைய வினைச்சொற்கள் இவை வாழ்த்தல், வைதல், வேண்டல், கட்ட ளையிடல் ஆகிய பொருள்களில் வரும்.

89. இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கு பொதுவாகி வரும் வினைகள் யாவை?
வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்றும் வினைக்குறிப்பு முற்றுச்

சொற்களும் யார் என்னும் வினு வினைக்குறிப்பு முற்றுச்சொல்லும், வியங்கோள் வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் இருதிணை, ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவாகி வரும்.

90. தெருநிலை (வினை)ப் பெயரெச்சங்கள் யாவை?
''செய்த'' என்னும் வாய்ப்பாட்டிறந்தகால பெயரெச்சமெனவும் ''செய்கின்ற'' என்னும் வாய்ப்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சமெனவும் ''செய்யும்'' என்னும் வாய்ப்பாட்டு எதிர்காலப் பெயரெச்சமெனவும் மூவகைப்படும்.

91. தெருநிலை வினைஎச்சங்கள் யாவை?
செய்து என்னும் வாய்ப்பாட்டு இறந்தகால வினைஎச்சமெனவும், செயவென்னும் வாய்ப்பாட்டு முக்காலத்திற்குரிய வினைஎச்சமெனவும் செயின் என்னும் வாய்ப்பாட்டு எதிர்கால வினையெச்சமெனவும் மூவகைப்படும்.

92. தெருநிலை வினைச்சொற்கள் எவ்வகையிற் பிரிக்கப்பட்டுள்ளது?
செய்யப்படுபொருள் குன்றியவினை, செய்யப்படுபொருள் குன்ருதவினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செய்யப்பாட்டுவினை என அறுவகையாகும்.

93. செய்வினை என்ருல் என்ன?
கருத்தாவின் தொழிலை நேரே உணர்த்தும் வினை செய்வினை.

94. செயப்பாட்டு வினையாவது யாது?
கருத்தா செய்யும் தொழிலை செய்யப்படுபொருள் அடைவதைக் காட்டும் வினை செயப்பாட்டுவினை.

95. செயப்படுபொருள் குன்றிய வினையாவது யாது?
இது செயப்படுபொருள் பெருத வினையாகும்.

96. செயப்படுபொருள் குன்ருவினையாவது யாது?
செயப்படுபொருளைப் பெற்ற வினை செயப்படுபொருள் குன்ருவினையாகும்.

97. இடைச்சொல் என்ருல் என்ன?
தனித்து வராமல் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொல்லாம்.

98. இடைச்சொற்களின் வகைகள் யாவை?
வேற்றுமை உருபுகள், இடைநிலைகள் சாரியைகள், விகுதிகள் உவமை உருபுகள் சுட்டுக்கள், வினுக்கள் முதலியவை இடைச்சொற்களின் வகையாம்.

99. உரிச்சொல் என்றால் என்ன?

பண்பை உணர்த்தி பெயர் வினைகட்கு (பொருட்டு) உரிமை பூண்டு நிற்கும் சொல்லாகும்.

100 தொடர் மொழி என்றால் என்ன?

ஒன்றேடொன்று பொருள் படத்தொடர்ந்து நிற்கும் இரண்டு முதலிய சொற்களின் கூட்டமாகும்.

101. தொகை நிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என 6 வகைப்படும்.

102 வேற்றுமைத் தொகை என்றால் என்ன?

ஐ, முதலிய வேற்றுமையுருபுகள் இடையிலே கெட்டு நிற்கப் பெயரோடு பெயரும், பெயரோடுவினை, வினைக்குறிப்புப் பெயர்களும் தொடர்வதாம்.

103 வினைத்தொகை என்றால் என்ன?

பெயரெச்சத்தின் விகுதியும் காலங்காட்டும் இடைநிலையும் கெட்டு நிற்க அதன் முதன் நிலையோடு பெயர்ச்சொல் தொடர்வதாம்.

104. உவமைத்தொகை யாவது யாது?

போல முதலிய உவமை உருபுகள் கெட்டு நிற்க உவமானச் சொல்லோடு உவமேயச்சொல் தொடர்வதாகும்.

105. உம்மைத்தொகை யாவது யாது?

நால்வகை அளவைகளால் பொருள்களை அளக்குமிடத்து எண்ணும்மை இடையிலும் இறுதியிலும் கெட்டுநிற்க பெயரோடு பெயர் தொடர்வதாம்.

106. அன்மொழித் தொகை என்றால் என்ன?

வேற்றுமைத் தொகை முதலிய ஐந்து தொகை நிலைத்தொடரும் தத்தம் பொருள் பருமளவில் தொகாது, தாமல்லாத பிறமொழி பொருள் படத்தொகுவதாம்.

107. தொகா நிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?

எழுவாய்த்தொடர், விளித்தொடர், வேற்றுமை தொகைநிலைத் தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என்பதாகும்.

108. அணி என்றால் என்ன?

செய்யுள்கட்கு அழகு செய்து நிற்பது அணியாகும்.

109. அவை எத்தனை வகைப்படும்?
சொல்லணி, பொருளணி என இருவகைப்படும்.

110. பொருளணிகள் யாவை?
தன்மைஅணி, உவமைஅணி, உருவகஅணி தற்குறிப்பேற்றஅணி

111. தன்மைஅணி என்றால் என்ன?
ஒரு பொருளின் இயல்பான தன்மையை உள்ளவாறு வருணித்துக் கூறுவது தன்மைஅணியாம்.

112 உவமைஅணி என்றால் என்ன?
இரு பொருட்கட்கு ஒப்புமை தோன்றக் கூறுவதாம். உவமானம் உவமேயம் முதலிய உறுப்புகளை உடையது.

113. உருவகஅணி என்றால் என்ன?
உவமானத்தின் தன்மையை உவமேயத்தில் ஏற்றி (இரண்டையும் ஒன்றுபடுத்தி) உருவகித்துக் கூறுவதாம்.

114. தற்குறிப்பேற்றஅணி என்றால் என்ன?
இயற்கையின் மேல் கவிதனது கற்பனையை ஏற்றிக் கூறுவதாம்.

115. புணர்ச்சியாவது யாது?
நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம்.

116. அது எத்தனை வகைப்படும்?
வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என இருவகைப்படும்

117. எழுத்துக்கள் எப்படிப் புணரும்?
இயல்பாகவும், விகாரமாகவும் புணரும்.

118. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?
நிலைமொழியும் வருமொழியும் விகாரப்படாது புணர்வதாம்.

119. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன?
நிலைமொழி வருமொழிகள் தோன்றல் திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களுள் ஒன்றை யாவது பலவற்றை யாவது பெற்றுப் புணர்வதாம்.

120. வழா நிலையாவது யாது?
முடிக்கப்படும் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் திணை பால் முதலியவைகளில் மாறுபடாமல் தொடர்ந்து நிற்பது வழா நிலையாகும்.

121. வழுநிலை யாவது யாது?

இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் மரபுகளுமாகிய ஏழும் தத்தம் முறைதவறி வந்தால் வழுவாம்.

122. வழுவமைதி என்றால் என்ன?
திணை, பால், எண், இடம், காலம் முதலியனவும் வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும் கலந்து ஒரு தொடராக வருவனவாயின் இழிவாலும் சிறப்பாலும் ஒரு முடிவாம் தவறாகத் தோன்றினும் பெரியோர் இதனை ஏற்றுக் கொள்வர்.

உதாரணங்கள் - புணர்ச்சி

இயல்புப் புணர்ச்சி:- பெரியபெண், பொன்மலர்

விகாரப் புணர்ச்சி:- வாழை + பழம் வாழைப்பழம் (தோன்றல்)
பல் + கோயில் - பற்கோயில் (திரிதல்)
மரம் + வேர் - மரவேர் (கெடுதல்)

உயிர் முன் உயிர்:- பனை + ஓலை - பனையோலை (யகரம்)
பூ + அழகு - பூவழகு (வகரம்)

உயிர்முன் வல்லினம்;- யானை + தந்தம் - யானைத்தந்தம்

உயிர்முன் மெல்லினமும் இடையினமும்:- பனை + நார் - பனைநார்
குதிரை + வண்டி - குதிரை வண்டி

மெய்முன் உயிர்:- வேல் + ஆயுதம் - வேலாயுதம்
மெய் + உரை - மெய்யுரை

மகர ஈறு:- மரம் + கிளை - மரக்கிளை
மரம் + சிறிது - மரஞ்சிறிது

மேலும் சில:- நாகு + ஈன்றது - நாகீன்றது.
செலவு + யாது - செலவீயாது.

ஆமுன் வல்லினம்:- ஆ + சிறிது - ஆசிறிது.

வினாவிளிமுன் வல்லினம்:- நீரே + தின்றீர் - நீரேதின்றீர்

குற்றிய லுகரத்தின்முன் வல்லினம்:- பத்து + பாட்டு - பத்துப்பாட்டு
வண்டு + கால் - வண்டுக்கால்.

சில உயிரீற்று மரபுப்பெயர்முன் வல்லினம்:- மா + காய் - மாங்காய்.

இடைச்சொல் ஏ, ஓ முன்வல்லினம்:- அவனோ + தின்றான் - அவனோ தின்றான்.
அவளே + சென்றாள் - அவளேசென்றாள்.

ல், ள் ஈற்றுப்புணர்ச்சி:- கல் + குடம் - கற்குடம்
முள் + சிறிது - முட்சிறிது
கல் + மாண்டது கனமாண்டது.

இறந்தகால இடைநிலைகள் :- த், ட், ந், ன்
நிகழ்கால ,, ,, :- ஆ, நின்று, கின்று, கிறு.
எதிர்கால ,, ,, :- ப், வ்
பெயர் இடைநிலைகள் :- ஞ், வ், த், ச்

பெயர்ச்சொல் - மாடு
வினைச்சொல் - நடந்தான்
இடைச்சொல் - அது, கண்
உரிச்சொல் - உறு, தவ
பொதுப்பெயர் - மரம்
சிறப்புப்பெயர் - காகம்
பொருட்பெயர் - மயில்
இடப்பெயர் - யாழ்ப்பாணம்
காலப்பெயர் - ஆவணி
சினைப்பெயர் - கை
குணப்பெயர் - செம்மை
தொழிற்பெயர் - போதல்
வினையாலணையும் பெயர் - பாடினவரைக் கண்டேன்
தன்மை - நான்
முன்னிலை - நீர்
படர்க்கை - அவன்
உயர்திணை - தேவன்
அஃறிணை - மாடு
ஆண்பால் - அரசன்
பெண்பால் - அரசி
பலர்பால் - மனிதர்கள்
ஒன்றன்பால் - எலி
பலவின்பால் - மாடுகள்
வினைமுற்று - நடந்தான்
வினைஎச்சம் - நடந்து போனான்
பெயரெச்சம் - நடந்த பையன்
இறந்தகாலம் - ஓடினான்
நிகழ்காலம் - ஓடுகிறான்
எதிர்காலம் - ஓடுவான்
தன்வினை - நடந்தேன்
பிறவினை - வருவித்தேன்
செய்வினை - அவள் பாட்டுப் பாடினாள்
செயப்பாட்டுவினை - பாட்டு அவளால் பாடப்பட்டது

இடுகுறிப்பெயர் - மரம்
காரணப்பெயர் - பறவை
காரண இடுகுறிப்பெயர் - முள்ளி
ஆகுபெயர் - யாழ்நாடு சிரித்தது
ஏவல் வினைமுற்று - கூறுதி
வியங்கோள் வினைமுற்று - வாழ்க
எதிர் மறை ஏவல் - உண்ணாதே
வினைத்தொகை - கொல்யானை
உவமைத்தொகை - கயற்கண்
உம்மைத்தொகை - இராப்பகல்
அன்மொழித்தொகை - கயற்கண் வந்தாள்
திணைவழுநிலை:- அவன் வந்தது
பால்வழுநிலை:- அவன் வந்தாள்
இடவழுநிலை:- யான் வந்தான்
காலவழுநிலை:- நாளை வந்தாள்
வழாநிலை:- அவர் நாளை வருவார். இராமன் இப்போது வருகிறான்
திணைவழுவமைதி:- பொன்னும் குதிரையும் வந்தார்கள்.
பால்வழுவமைதி:- தேவன் மூவுலகிற்கும் தாய் இவன் பெண்.
இடவழுவமைதி:- நீயோ அவனோ இது செய்தார்.
காலவழுவமைதி:- மலை நிற்கின்றது.

CL.No: ________________
Acc.No: 24

Author & Brief Title :

| 24 | |
| --- | --- |
| வகுப்பெண் | வரவுப்பதிவெண் |

யா/கரணவாய் பொன்னம்பலவித்தியாலயம்
நூலகமும் கற்றலுக்கான வளநிலையம்
இப்புத்தகம் மேற்குறிப்பிடப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஒப்படைக்கப்படல் வேண்டும். தவறின் தண்டப்பணம் அறவிடப்படும்.

## ★ மாணவர் மொழி நூல் ★

மொழி கற்பதற்கு சிறந்த வழிகாட்டி
புலமைப் பரிசில் மற்றும் போட்டிப் பரீட்சைகட்கு சிறந்தது.
அகராதி போல் உதவுவது.
பாடநூலை அடிப்படையாகக் கொண்டது.
இணைமொழி, மரவுச் சொற்கள், எதிர்ப்பால், எதிர்ச் சொல் யாவும் நிறைந்தது.
ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து கற்க உதவவல்லது.

## ★ எமது அடுத்த வெளியீடுகள் ★

### வினைஇல்லமும் பெயர் விருட்சமும்
(இலக்கணஅறிவு நூல்)

## ★ நூற்பிரதிகள் கிடைக்குமிடங்கள் ★

1. ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.
2. ஓம் முருகா ரெக்ஸ்ரைல்ஸ், வலந்தலை, காரைநகர்.
3. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
4. சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் புத்தகசாலை, சாவகச்சேரி.
5. இலங்கை மத்திய புத்தகசாலை, கொழும்பு வீதி, கண்டி.
6. சொய்ஸ் பலெஸ், கல்முனை.


---


அச்சுப்பதிப்பு:-
பாலா அச்சகம், காரைநகர். ☎ 24